ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# "கவிஞர் வைரமுத்து திரையிசைப்பாடல்களில் நாட்டுப்புறப்பாடல்களின் தாக்கங்கள் ஓர் ஆய்வு"

**ஆய்வாளர்**
*அ.செந்தில் ராஜா,* Ref. No: 42554,
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத் துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி),*
***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***
*கரூர்-5*

**நெறியாளர்**
*முனைவர். கி. மாரியம்மாள்,*
*முதல்வர்,*
*அரசு கலை அறிவியல் கல்லூரி, இலால்குடி,*
*திருச்சி-621 712.*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஓர் மக்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்க்கும் அந்த மக்களின் உள்ளார்ந்த பண்புகளையும், உணர்வுகளையும் விளங்கிக் கொள்வதற்கு நாட்டுப்புறவியல் பெருந்துணை செய்துவருகின்றது. இன்று மானுடவியல், மொழியியல் அறிஞர்கள் உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் இனங்களின் மொழியையும், பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்வதற்கு நாட்டுப்புறவியலை ஓர் அடிப்படையாக கருதிவருகின்றனர். நாட்டுப்புறப்பாடல்களில் நமக்கு கிடைக்கும் தொன்மையான எழுத்துச்சான்று தொல்காப்பியமாகும். தொல்காப்பியர் வாய்மொழி இலக்கியங்களுக்கும் இலக்கணம் வகுத்துள்ளார். 'பண்ணாத்தி' என்று தொல்காப்பியர் கூறவது நாட்டுப்புறப்பாடல்களையே என்று அறிஞர்கள் பலர் சுட்டுகின்றனர். நாட்டுப்புறவியல் இன்று பல தடைகளைக் கடந்து உலகளாவிய அளவில் பன்னோக்குத் துறையாக வளர்ந்துள்ளதை நம்மால் அறிய முடிகின்றது.*

**முன்னுரை**

*சங்க இலக்கியத்தில் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கினைக் காண முடிகின்றது. நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து தமிழிசைப் பாடல்கள் உருவாகியிருப்பதை ஆய்வுகள்*

*நமக்கு தெளிவுப்படுத்துகின்றன. கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்கள் தொடங்கி தற்கால திரையிசைப்பாடல்கள் வரை நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கம் இருந்துவருகின்றன. இதில் கவிஞர் வைரமுத்து திரையிசைப்பாடலில் தாலாட்டு, பழமொழி, விடுகதை, தொழிற்பாடல்கள், விழாப்பாடல்கள், கதைப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் என்று நாட்டுப்புறவியலின் தாக்கம் வைரமுத்து திரையிசைப்பாடல்களில் வெளிப்படுவதை இந்த ஆய்வு விளக்குகின்றது.*

***நாட்டுப்புறப்பாடல்கள் – சொல்லிலக்கணம்***

*நாட்டுப்புறப்பாடல்களை நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், ஏட்டில் எழுதாக்கவிதைகள், காற்றில் வந்தகவிதைகள், மக்கள் பாடல்கள், மரபுவழிப் பாடல்கள், பாமரர் பாடல்கள், பரம்பரைப் பாடல்கள், நாட்டார் பாடல்கள் எனப் பலவகைப் பெயர்களால் நாட்டுப்புறப்பாடல்களை மக்களால் அழைக்கப்படுகின்றனர்.*

***தாலாட்டு***

*மனிதன் கேட்கும் முதல் பாட்டு தாலாட்டு ஆகும். மடியில் கண்விழித்து குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டி, தன் நாவினை ஆட்டிப் பாட்டிசைத்து தூங்க வைக்கும் ஒரு தாயின் பாட்டே தாலாட்டு ஆகும். தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே இத்தாலாட்டுப் பாடல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. "தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு தான் தாலாட்டு"[1] என்கிறார் தமிழண்ணல். ஒவ்வொரு மனிதனுக்கும் தொட்டில்தான் ஆரம்பப் பள்ளி அவன் தாய் தான் அவனுக்கு முதல் ஆசிரியர். தாலாட்டு புரியாத வார்த்தைகளாக இருந்தாலும் அதன் இசையானது குழந்தையைத் தூங்க வைக்கின்றது. கண்ணில் கண்ணீரும், நெஞ்சில் சுமையும், கையில் பிள்ளையும் தந்துவிட்டு தனது கணவன் கைவிட்டுவிட்டான். குடும்பத்தில் தனக்கு நேர்ந்த அவலங்களையும் தனது பிள்ளையின் எதிர்காலத்தையும் எண்ணி தாலாட்டுப்பாடி சொல்லி அழுகிறாள். இதனை,*

*அம்மா நாந்தாண்டி – ஒனக்கு*
*அப்பனும் நாந்தாண்டி*
*பொட்டச்சியை யாரும் இங்கே*
*பெத்துவைக்கக் கூடாது*
*பெத்தாலும் பொட்டப்புள்ள*
*குத்தவைக்கக் கூடாது*
*வாழ ஒரு கொதள்ளுனா*
*வாழவைக்க மாட்டாக*
*பொண்டாட்டிக்குப் புள்ள பொறந்தா*
*காதலிக்க மாட்டாக*
*பாசம் எல்லாம்*

*பத்தே மாசமடி"*[2]

*என்று ஏர்முனை' என்கின்ற திரைப்படத்தில் கணவன் கைவிட்ட தனது வாழ்வு எத்தகைய சோகத்திற்கு உட்பட்டது என்பதனையும், பிள்ளையை விட்டு தந்தை சென்றாதால் ஒற்றை ஆளாய் தனது மகளை வளர்க்க பாடுபடும் தாயின் போராட்டத்தை தாலாட்டு வடிவில் கவிஞர் விளக்குகின்றார்.*

***பழமொழி***

*பழமொழி என்பதை முதுசொல், முதுமொழி, பழஞ்சொல், சொல்லடை, சொல்வாந்திரம் எனப் பல்வேறு பெயரில் அழைக்கப்படுகின்றன. பிறருக்கு வழிகாட்டியாக விளங்குவதால் இவை 'பொன்மொழி' என்றும் பொதுவாக அழைக்கப்படுகின்றது. நம் முன்னோர்கள் தொன்று தொட்டு தங்கள் அனுபவங்களில் உணர்ந்த உண்மையை உலகத்தோர் உணரும் பொருட்டு சுருங்க கூறி விளங்க வைக்கும் விதத்தில் உதிர்த்த வாய் மொழி இலக்கியம் பழமொழியாகும்.*

*தொல்காப்பியர் முதன் முதலாக பழமொழிக்கான வரையரை வகுத்தார். நுண்மை, சுறுக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகளைக் கொண்டு கருதிய பொருளைக் காரணத்தோடு முடித்துக் கூறுதல் முதுமொழி ஆகும்.*

***"நுண்மையும் சுறுக்கமும் ஒளியுடைமையும்***
***மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றி***
***குறித்த பொருளை முடித்தற்குவரூஉம்***
***ஏது நுதலிய முதுமொழி என்ப"***[3]

*என்னும் மேற்காணும் நூற்பா விளக்குகின்றது.*

***"இம்மை நன்று செய் மருங்கில் தீது இல்"***[4]

*என்பது பழமொழியாகும். இப்பிறப்பினில் நன்மை செய்யுமிடத்திற்குத் தீமை வருவதில்லை என்று தொன்றுதொட்டு வழங்கும் பழமொழியினை புலவர் மாமூலனார் பாடுகிறார்.*

***"பழுத்த பெரியவர்கள் தம் நுண்ணறிவு சொல்வன்மை***
***பட்டறிவு உயர்ந்த நோக்கம் ஆகிய***
***எல்லாவற்றையும் திரட்டிக் கூறியவை***
***பழமொழிகள் ஆகும்"***[5]

*என்று தமிழண்ணல் குறிப்பிடுகின்றார். நாகரீக வளர்ச்சி, பிற மொழியின் ஆளுமை, நகரமயமாதல், கூட்டுகுடும்ப சிதைவு போன்ற காரணங்களினால் பழமொழி நம்மிடம்*

இருந்து மறைந்து வருகின்றன. அழிந்து வரும் பழமொழியினை மீட்டெடுத்து அடுத்த தலைமுறையினர்க்கு நம் முன்னோரின் நற்கருத்தை கொண்டு செல்லும் முயற்சியாய் இவர்தம் திரையிசைப் பாடல் விளங்குகின்றன. மூத்தோர் சொல் முழு நெல்லிக்காய் போல முன்பு கசக்கும் பின்பு இனிக்கும் என்ற பழமொழியை 'பாட்டி சொல்லைத் தட்டாதே' என்ற திரைப்படத்தில் பாட்டி தனது பேரனுக்கு அறிவுரை வழங்கியதை பின்வரும் பாடல் விளக்குகின்றன.

**"மூத்தோர் சொன்ன வார்த்தை – அது**
**கடலில்விட்ட பெருங்காயம்"[6]**

'திருமதி ஒரு வெகுமதி' என்கின்ற திரைப்படத்தில் அலுவலகத்தில் நேர்மையாக பணி புரிந்து வந்த குடும்பத்தலைவன் தனது மனைவியின் பேராசையினால் கையூட்டுக்கு ஆளாகிறான். கையூட்டில் மாட்டிக் கொண்ட தலைவன் இப்போது சிறைக்குச் செல்கிறான் என்பதனைப் பின்வரும் பாடலில் காணலாம்.

**"ஆவதும் பெண்ணாலே – மனு'ன்**
**அழிவதும் பெண்ணாலே"[7]**

மேற்கண்ட பாடல் வாயிலாக குடும்பத்தலைவன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துவதை அறியலாம்.

**விடுகதை**

விடுகதை என்பதை தமிழில் பிதிர், புதிர், அழிப்பான், கதை, வெடி, நொடி என்று பல்வேறு பெயர்களில் தமிழகத்தில் அழைக்கப்படுகின்றன. நாட்டுப்புற இலக்கிய வகைகளில் காலத்தால் முற்பட்டது. விடுகதை ஆகும். விடுகதை என்பது அறிவுக்கு விருந்தாகவும், சிரிப்புக்கு களமாகவும் விளங்குகின்றது. ஒரு இரு வரிகளில் ஒரு பொருளை நேரடியாக விவரிக்காமல் மறைப்பொருளாக விவரித்து தொடுப்பது விடுகதை ஆகும். தொல்காப்பியர் விடுகதையை 'பிசி' என்று குறிப்பிடுகின்றார். செய்யுளியலில் 'பிசி' என்ற சொல்லால் விடுகதையைக் குறிப்பிட்டு அதன் இயல்பை பின்வருமாறு விளக்குகிறார்.

**"ஒப்பொடு புணர்ந்த உவமத்தாலும்**
**தோன்றுவது கிளந்த துணிவினாலும்**
**என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே"[8]**

*உவமையாக வருவதைக் கூறிப் பொருளை மறைமுகமாகக் காட்டுவதும்இ தெளிவுபட வருவதும் பிசி என்று குறிப்பிடப்படுகின்றன. விடுகதை என்பது உழைக்கும் மக்களின் படைப்பாற்றல் ஆகும். 'பூவேலி' என்கின்ற திரைப்படத்தில் கதைதலைவன் தனது பண்ணையில் பணிபுரிகிற தொழிலாளரின் கலைப்பு நீங்க செய்ய புதிர் தொடுத்து விளையாடுகிறான்.*

***"கேக்க ஒரு காதில்ல பாக்க ஒரு கண்ணில்ல***
***பேச ஒரு வாயில்ல எனக்கு***
***என்ன தேடி வந்தா நீதி உண்டு உனக்கு***
***நான் யாரு நான் யாரு***
***தராசு தராசு***
***பருப்புக் குழம்பு மணப்பதேன்***
***படைவீரன் சாவதேன்***
***பெருங்காயத்தால் பெருங் காயத்தால்***
***எருக்க இலை பழுப்பதேன்***
***எருமைக் கன்னு அழுவதேன்***
***பால் வத்திப் போன பால் வத்திப் போன"[9]***

**தொழிற்பாடல்கள்**

*உழைக்கும் தொழிலாளருக்கு தங்களின் துன்பம் தெரியாமல் இருப்பதற்காக பாடப்படும் பாடல் தொழிற்பாடல்கள் ஆகும். இதனை "தென்னார்க்காடு மாவட்டங்களில் சில பகுதிகளில் வேளாண்மைத் தொழிற்பாடல்களை 'காட்டுப்பாட்டு' என்று கூறுகின்றனர். அவர்கள் வேளாண் நிலப்பகுதிகளைக் 'காடு' என்று அழைப்பதால் அங்கு பாடப்படும் பாடலை காட்டுப்பாடல் என்று கூறுகின்றனர்."[10] உழவனுக்கு எப்படி பூமிதான் தாயோ! அதைப் போன்று மீனவனுக்குக் கடல் தான் தாயாகும். இதனை வைரமுத்து 'கடல்பு+க்கள்' என்கின்ற திரைப்படத்தில் மீனவர்கள் வாழ்வியலை பிரதிப்பலிப்பதாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது.*

***"வலைவிரிக்கும் எங்களுக்குக்***
***கைவரிக்க மாட்டாயே***
***உலகத்தின் சோற்றுக்கெல்லாம்***
***உப்புப் போட்டவள் நீதானே***

***கரைவந்து சேர்ந்தால் மீன் நமக்குணவு***
***கடலுக்குள் வழுந்தால் மீனுக்கு உணவு***
***நீலக் கடலுக்கு மேடுபள்ளம் இல்லையே***
***சாதிபேதம் மதபேதம் எங்களுக்கும் இல்லையெ"[11]***

**விழாப்பாடல்கள்**

*தமிழர்கள் வாழ்வியலில் விழாக்கள் இன்றியமையாததாகும். விழாக்காலங்களில் சிறியவர் முதல் பெரியவர்கள் வரை மக்கள் அனைவரும் ஒன்று கூடி தங்களின் அன்பையும், மகிழ்ச்சியையும் ஒருவருக்கு ஒருவர் பரிமாரிக்கொள்கிறனர். திருவிழாக்களின் முக்கிய நோக்கமே ஒற்றுமை, பகிர்ந்துண்ணல், விருந்தோம்பல் ஆகியவற்றை வலியுறுத்துவதாகும். திருவிழாக்கள் என்பது ஓர் இடத்தில் உள்ள மக்களின் நாகரிகம், கலாச்சாரம் பாரம்பரியம் ஆகியவற்றை பிரதிபலிக்கின்றது. தமிழ்நாட்டின் பெரிய நகரமான மதுரையை 'திருவிழா நகரம்' என்று அழைக்கப்படுகின்றது. 'திருமகன்' என்கின்ற திரைப்படத்தில் விழாக்களின் பெருமையையும், அதன் அவசியத்தையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதாக பின்வரும் பாடல்களை அமைத்திருப்பார்.*

***"ஏன் எதுக்கு நம் சித்திரை திருவிழா***
***ஏன் எதுக்கு இந்தத் தேர்த் திருவிழா***
***சாதி சனம் கூடிடத்தான் - நாம ஒத்துமையா***
***வாழ்ந்திடத்தான் பண்பாட்டக் காட்டிடத்தான் - அது***
***அழியாமக் காத்திடத்தான்***
***மஞ்சத்தண்ணி ஊத்தறது எதுக்கு – அதில்***
***மாமன் மச்சான் ஒறவு மொற இருக்கு – அடி***
***மொளப்பாரி தூக்குறது எதுக்கு – மொட்டு***
***பூத்தசேதி சொல்லணுமே அதுக்கு"[12]***

**கதைப்பாடல்கள்**

*நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துக் கூறுகளும் கதைப்பாடலுக்கும் பொருந்தும். கதையைப் பாடலாகப் பாடப்படுவதைக் கதைப்பாடல் என்று அழைக்கப்படுகின்றது. "ஆங்கிலத்தில் இதனை 'டீயடடயன' என்று கூறவர். இது 'டீயடடயசந' என்ற இலத்தீன் சொல்லிருந்து பிறந்ததாகும்."[13] புலித்தேவன் நெற்கட்டான் செவ்வலைத் தலைமை இடமாக கொண்டு ஆட்சி செய்து வந்தார். ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய புலித்தேவன் ஆங்கிலேயரை எதிர்த்து போர் செய்த முதல்*

*இந்திய வீரர் ஆவார். இந்தியாவின் 'முதல் விடுதலைப் போர்' எனக் கருதப்படும் சிப்பாய் கலகத்திற்கு முன்னோடியாக புலித்தேவன் விளங்கினார். புலித்தேவனின் வீரத்தை பறைசாற்றும் வகையில் 'சீவலப்பேரி பாண்டி' என்கின்ற திரைப்படத்தில் கதைநாயகன் நெற்கட்டான் செவ்வல் பகுதியை சேர்ந்தவர். நாயகன் ஊர் மக்களின் தலைவனாக விளங்குகிறான். மக்கள் தனது தலைவனை வாழ்த்திப்பாடும் போது ஊர் அருமை, பெருமைகளைச் சொல்லி பாடுவதாகக் கீழ்க்கண்ட பாடல் மூலம் அமைந்துள்ளது.*

***"புலித்தேவன் பொறந்ததிந்த மண்ணு – பல***
***போர் கண்டு செயிச்சது இந்த மண்ணு"***[14]

*'மலையூர் மம்பட்டியான்' என்கின்ற திரைப்படத்தில் நாட்டார் மரபில் மம்பட்டியான் கதைப்பாடலை இயற்றியிருப்பார் கவிஞர்.*

***"காட்டு வழி போற பொண்ணே***
***கவலப்படாதே***
***காட்டுப்புலி வழிமறிக்கும்***
***கண்கலங்கி நிக்காதே***
***மம்பட்டியான் பேரு – சொன்னபப்***
***புலி ஒதுங்கும் பாரு"***[15]

***ஒப்பாரிப்பாடல்கள்***

*ஒப்பாரிக்கு பிணைக்கானம், இரங்கற்பா, இழவுப்பாட்டு என்றெல்லாம் கூறுகின்றனர். ஒப்பாரி என்பதை ஒப்பூ+ஆரி என்று பிரித்து 'ஒப்புச் சொல்லி அழுதல்' என்றும் பொருள் கொள்ளலாம். இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரிப்பாடல்கள் ஆகும். 'கருத்தம்மா' என்கின்ற திரைப்படத்தில் ஆண் பிள்ளை வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு முறையும் எதிர்ப்பார்த்து ஏமாற்றம் அடையும் பாமரன் எப்படியும் ஆண் வாரிசை பெற்றிட வேண்டும் என்ற ஆசை கொள்கிறான். இம்முறையும் பெண் பிள்ளையே பிறந்ததால் பிறந்த குழந்தையின் முகத்தை கூட பார்க்கக் விரும்பாத ஆணாதிக்க தந்தை கள்ளிப் பால் கொடுத்து கொன்று விடும் படி உள்ளூர் மருத்துவச்சியிடம் கூறகிறான்.*

***"தாய்ப்பாலு நீ குடிக்கத்***
***தலையெழுத்து இல்லையடி***
***கள்ளிப்பால நீ குடிச்சுக்***

**கண்ணுறங்கு நல்லபடி**
**அடுத்த ஒரு ஜென்மம் வந்து**
**ஆணா நீ பொறந்தா**
**பூமியில எடமிருக்கும்**
**போய்வாடி அன்னக்கிளி"[16]**

*முதல் தாலாட்டே அப்பிள்ளைக்கு ஒப்பாரியாக மாறியுள்ளதை வேதய்யுடன் குறிப்பிட்டியிருப்பார்.*

***முடிவுரை***

*நம் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் வசிப்பவர்கள். குலவையும், கோலாட்டமும், கும்மியும், தாலாட்டும், ஒப்பாரியும், காவடிச்சிந்தும் பாடி ஆடுகிறவர்கள். கிராம மக்கள் அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக தனது திரையிசைப்பாடல்களில் பாமரப்பாடல்கள் என்று அழைக்கப்படும் நாட்டார் பாடல்களை மேல்தட்டு மக்களிடம் கொண்டு சென்ற பெருமை வைரமுத்து அவர்களின் திரையிசைப்பாடல்களுக்கு உண்டு. தமிழில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை படைத்திருந்தாலும் அவருக்கு அழியாப் புகழைப் பெற்றுத்தந்தது நாட்டார் பாடல்களே என்றால் அது மிகையில்லை.*

**மேற்கோள்கள்**

*1.க.சத்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.64.*
*2.வைரமுத்து, ஆ.பா.எண்.357, ப.401.*
*3.தமிழண்ணல்(உ.ஆ), தொல், (தொகுதி-3), செய்யு. நூ.1433, ப.98.*
*4.தமிழண்ணல், தொல்காப்பியம், (தொகுதி-3), ப.98.*
*5.மேலது,*
*6.வைரமுத்து, ஆ.பா.எண்.282, ப.323.*
*7.வைரமுத்து, ஆ.பா.எண்.252, ப.292.*
*8.தமிழண்ணல்(உ.ஆ), தொல், (தொகுதி-3), செய்யு. நூ.1432, ப.97.*
*9.வைரமுத்து, ஆ.பா.எண்.562, ப.631.*
*10.ஆறு.இராமநாதன், நாட்டுப்புற இலக்கியங்கள், ப.58.*
*11.வைரமுத்து, ஆ.பா.எண்.716, ப.813.*
*12.வைரமுத்து, ஆ.பா.எண்.919, ப.1067.*
*13.க.சத்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.81.*
*14.வைரமுத்து, ஆ.பா.எண்.445, ப.497.*
*15.வைரமுத்து, ஆ.பா.எண்.86, ப.121.*
*16.வைரமுத்து, ஆ.பா.எண்.422, ப.473.*

**References**


1. Vairamuthu (Feb-2011) , Aayiram Padalkal Vairamuthu, Surya Literature Private Limited, Chennai, Cell: 914424914747
2. Puliyur Kesigan (1961), Tholkappiyam, Paari Nilayam, Chennai – 600001.
3. Sathivel .S(1988), Nattupuraviyal Aaivu, Manikkavasagar Pathippagam, Chennai – 600001.
4. Tamil Anal, Manikkavasagar Pathippagam, 31, Sankar Theru, Parrimunai, Chennai -600108
5. Puliyur Kesigan (May – 2014), ThirukkuralPuthiyaUrai, Poompuhar Pathippagam, 127, PragasamSalai Broadway, Chennai – 600108, phone : 044-25267543